**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண் : 48/2019**

**வாதி தரப்பு சாட்சி:2**

| | |
|---|---|
| பெயர்: சுரேஷ் (வா.சா.2 ) | நாள்: 16.09.2025 |
| த.பெ: | |

**2025ம்** ஆண்டு **செப்டம்பர் மாதம் 16ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் S.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 – குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பு):-**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி மகேஷ் எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 22 வருடங்களாக தெரியும். வாதி இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் அவர் சொன்னபிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் கேட்டுக்கொண்டதால் தான் நான் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் வழக்கு எண் மட்டும் வாதி சொல்லி தெரியும். வாதி என்ன வழக்கு போட்டார் என்று தெரிந்துகொள்ள நீதிமன்றத்தில் ஏதும் மனு செய்தேனா என்றால் இல்லை வாதி சொல்லி தான் எனக்கு தெரியும். எழுநூத்திமங்கலம் என்ற ஊருக்கும் வழக்கு சொத்திற்கும் இடையே எத்தனை தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ. தூரம் இருக்கும்.

2. நான் என்ன படித்துள்ளேன், என்ன பெயரில் டியூசன் சென்டர் வைத்துள்ளேன், என்ன தொழில் செய்து வருகிறேன் என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. டியூசன் சென்டர் வைத்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.16 05:03:34 +0530

நடத்திவருவதற்கு உரிமம் ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. டியூசன் சென்டர் உரிமம் பெறுவதற்கு அரசிற்கு ஏதாவது விண்ணப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எந்த விலாசத்தில் தற்போது குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி விஸ்வநாதன் என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் டியூசன் சென்டர் நடத்தி வரும் சொத்தின் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்கு சொத்தின் சர்வே எண்ணோ, விஸ்தீரணமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள 2013ம் ஆண்டு ஆவணம் வா.சா.ஆ.2ல் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். வாதி மகேஷ் கிரயம் பெற்ற ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அது எந்த தேதி மாதத்தில் பதிவு செய்தது என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. அந்த கிரய ஆவணத்தில் யார் யார் தரப்பினர்கள் மற்றும் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூல ஆவணம் பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள பிரதிவாதி விஸ்வநாதன் வீட்டின் வடபுறம் 3 அடி அகலத்தில் கிழமேலாக உள்ள தடத்தில் நீளத்தை அறுதியிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். அந்த தடத்தில் வாதி மகேஷ் 3 கதவுகள் அமைத்து பூட்டு போட்டுள்ளார் என்றால் அந்த சொத்து வாங்கும்போதே அப்படி தான் இருந்தது. மகேஷ் கிரயம் வாங்கிய சொத்தில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் 2 மாதத்திற்கு முன்பு தனபால் என்ற ஒருவர் குடியிந்து வந்தார். வாதி மகேஷ்-ன் வீட்டு கிழகோடியில் ஒரு கிணறு மூடுகல் போட்டு மூடப்பட்டுள்ளது என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.16 05:03:50 +0530

சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி எந்த டியூசன் சென்டர் வைத்தும் நடத்தவில்லை என்றாலும், தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்தில் டியூசன் சென்டர் நடத்தி வருவதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி மகேஷ் வீட்டின் கிழகோடியில் ஒரு கிணறு இருந்தது, அதை பிரதிவாதிகள் பயன்படுத்தியதே இல்லை என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு உண்டான தாவா சொத்தின் அனுபவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூல ஆவணங்களில் உள்ள சரத்துகள் என்வென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.16 05:03:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.